www.Padasalai.Net www.CBSEtips.in

M

# இரண்டாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - நவம்பர் 2019

பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

## வணிகவியல்

நேரம்: 1.15 மணி மதிப்பெண்கள்: 45

### பிரிவு - I

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10×1=10

1. நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ........... நுகர்வோர் பாதுகாப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
   அ) ஆகஸ்டு 15 ஆ) ஏப்ரல் 15 இ) மார்ச் 15 ஈ) செப்டம்பர் 15
2. 1960 ல் நிறுவப்பட்ட நுகர்வோர் சங்கங்களின் சர்வதேச அமைப்பின் தலைமையகம் எங்குள்ளது?
   அ) லண்டன் ஆ) சீனா இ) ஜப்பான் ஈ) அமெரிக்கா
3. ஜான் F. கென்னடி அவர்கள் கூற்றுப்படி, அடிப்படையான நுகர்வோர் உரிமை என்பது
   அ) பாதுகாப்பில் உரிமை ஆ) தகவல் பெறும் உரிமை
   இ) தேர்ந்தெடுக்கும் உரிமை ஈ) மேற்கூறிய அனைத்தும்
4. புதிய பொருளாதாரக் கொள்கை ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது ........
   அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015
5. அறுதியிடப்படாத பொருளைப் பொறுத்தவரை வாங்குநருக்கு எப்போது உரிமை மாறுகிறது?
   அ) அறுதியிடப்பட்ட பின்பு
   ஆ) ஒப்பந்தத்தின் பேரில் சரக்கினை ஒதுக்கி வைக்கும் போதும்
   இ) நிறையிட்டு அளந்த பிறகு ஈ) அ மற்றும் ஆ
6. எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாவதியாகிறது?
   அ) 3 மாதங்கள் ஆ) 6 மாதங்கள் இ) 9 மாதங்கள் ஈ) 12 மாதங்கள்
7. மாற்று முறை ஆவணச் சட்டம் 1881 பிரிவு ........... கீழ் மாற்றுச் சீட்டு வருகிறது.
   அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6
8. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்தெந்த பண்புகள் தொழில் முனைவோர்க்கு உரித்தானவை?
   அ) துணிகர உணர்வு ஆ) நெளிவு சுளிவு இ) தன்னம்பிக்கை ஈ) அனைத்தும்
9. *பொருத்துக :*

| | | |
|---|---|---|
| வாடிக்கையாளர் | - | 1. ஆர்தர். எம். வேய்மர் |
| நுகர்வோர் உரிமை | - | 2. மன்மோகன் சிங் |
| நுகர்வோர் இயக்கத்தின் தந்தை | - | 3. ஜான் F. கென்னடி |
| வணிகத்தின் சுற்றுசூழல் | - | 4. ரால்ப் நேடர் |
| தாராளமயமாக்கல் கொள்கை | - | 5. மகாத்மா காந்தி |

   அ) 5, 3, 4, 2, 1 ஆ) 5, 3, 4, 1, 2 இ) 5, 2, 3, 1, 4 ஈ) 3, 4, 5, 1, 2
10. தொழில் முனைவு என்ற சொல் ............ மொழி சொல்.
   அ) பிரஞ்சு ஆ) லத்தீன் இ) கிரேக்க ஈ) ஜப்பான்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



## பிரிவு - II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 11 ற்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4×2=8

11. ராஜா என்பவர் தன் குடும்பத்துடன் விடுமுறை தினத்தன்று குளிரூட்டப்பட்ட திரையரங்கிற்கு திரைப்படம் காண சென்றார். உரிய கட்டணத்தையும் செலுத்தினார். ஆனால் திரைப்படம் தொடக்கத்தில் செய்யப்பட்ட குளிர்சாதன வசதி பின்பு நிறுத்தப்பட்டது. திரையரங்கு நிர்வாகிகளிடம் முறையிட்டும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை. மிகுந்த மன உளைச்சலுடன் குடும்பத்துடன் திரையரங்கில் திரைப்படம் பார்த்த ராஜாவிற்கு நீங்கள் வழங்கும் ஆலோசனை என்ன?
12. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
13. தரமுடைய பொருட்கள் வாங்கும்போது நுகர்வோர் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை?
14. தேசிய ஆணையத்தினைப் பற்றி உனக்குத் தெரிந்ததை எழுதுக.
15. கலப்பு பொருளாதாரம் என்றால் என்ன?
16. தனியார்மயமாக்கல் என்றால் என்ன?

## பிரிவு - III

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17 ற்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4×3=12

17. என்ன நோக்கத்திற்காக பள்ளிகளில் நுகர்வோர் மன்றம் ஆரம்பிக்கப்படுகிறது?
18. உலகமயமாக்கலின் ஏதேனும் மூன்று நன்மையை எழுதுக.
19. சரக்கு மற்றும் நிகழ் சரக்கு பற்றி எழுதுக.
20. இரண்டு வகை கீறல்களை விவரி.
21. தொழில் முனைவோர் மற்றும் அகதொழில் முனைவோர் இவர்களை வேறுபடுத்துக. (ஏதேனும் மூன்று)
22. வியாபாரத்தின் மூன்று சுற்றுச்சூழல் காரணிகளை விளக்கு.

## பிரிவு - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 3×5=15

23. நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?

(அல்லது)

பொதுமக்கள் மத்தியில் நுகர்வோர் விழிப்புணர்வினை எவ்வாறு உருவாக்குவாய்?

24. வணிகத்தின் பொருளாதார மற்றும் சமூக கலாச்சார சூழலை விளக்குக.

(அல்லது)

தொழில் முனைவோரை வகைப்படுத்துக.

25. நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக.

(அல்லது)

காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக.

---------

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned by CamScanner

**மதுரை (மா) +2 வணிகவியல் 2ம் பருவத் தேர்வு அக்-19**
**சரியான விடை**

1. (இ) மார்ச் 15
2. (அ) லண்டன்
3. (ஈ) மேற்கூறிய அனைத்தும்
4. (ஆ) 1991
5. (ஆ) ஒப்பந்தத்தின் பேரில் சரக்கினை ஒதுக்கி வைக்கும் போது
6. (அ) 3 மாதங்கள்
7. (ஈ) 6
8. (ஈ) அனைத்தும்
9. (ஆ) 5,3,4,1,2
10. (அ) பிரஞ்சு

**ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி 4X2=8**

**11. திரு ராஜாவிற்கு நான் வழங்கும் ஆலோசனை:** ராஜா மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தை அணுகி திரையரங்கு நிர்வாகிகள் எதிராக வழக்குத் தொடுத்து இழப்பீடு பெற ஆலோசனை கூறுவேன்.

**12. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டு:** உணவு தானியங்களில் சிறிய கற்கள் சேர்க்கப்படுகின்றன. தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலக்கப்படுகின்றது. தேனின் அளவை அதிகரிப்பதற்காக தண்ணீர் மற்றும் சர்க்கரை சேர்க்கப்படுகின்றது. மஞ்சள்தூள் போன்ற மசலாக்களுடன் மெத்தனால் சேர்க்கப்படுகின்றது. கருப்பு மிளகுடன் பப்பாளி விதை கலக்கப்படுகின்றது. மிளகாய்ப் பொடியுடன் செங்கல் பொடி கலக்கப்படுகின்றது

**13. தரமுடைய பொருட்கள் வாங்கும்போது நுகர்வோர் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை?** தரமுடைய பொருட்கள் வாங்கும்போது, நுகர்வோர் ISI, அக்மார்க், FPO போன்ற தரக்குறியீடு சான்றுகளை மற்றும் அடையாளக் குறியீடுகளை இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும்.

**14. தேசிய ஆணையத்தினைப் பற்றி உனக்குத் தெரிந்ததை எழுதுக?** இவ் அமைப்பு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 ன் கீழ் ஒரு பகுதி நீதிமன்றமாக 1988 ஆம்ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைமை அலுவலகம், புதுடெல்லியில் இயங்கி வருகிறது. இந்த தீர்ப்பாணையம் உச்ச நீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற நீதிபதியை, தலைவராக கொண்டு இயங்கி வருகிறது. இவ் அமைப்பு, தேசிய தீர்பாணையம் என்றும் அழைக்கப்பட்டு வருகிறது.

**15. கலப்பு பொருளாதாரம்** அரசு மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டின் பங்களிப்பும் இணைந்த பொருளாதாரம், கலப்பு பொருளாதாரம் ஆகும்.

**16. தனியார்மயமாக்கல்** பொதுதுறை நிறுவனங்களின் உரிமைகளை, தனியார் நிறுவனங்களுக்கு மாற்றி தரும் நிகழ்வு அல்லது கொள்கையை குறிப்பிடுவதாகும்.

**ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி : 4X3=12**

**17 பள்ளிகளில் நுகர்வோர் மன்றத்தின் நோக்கம்**
மாணவ மாணவியருக்கு சரக்கு மற்றும் சேவை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
கலப்படம் போலி பொருட்கள் பொருட்களின் தரம் மனித உயிருக்கு ஊறு விளைவிக்கும் பொருட்கள் பொருட்களின் தரம் விலை ரசாயனம் கலந்த பொருட்கள் போன்றவற்றை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
உற்பத்தி தேதி காலாவதி தேதி பொருட்களின் எடை எண்ணம் அளவு பயன்படுத்தும் முறை பற்றிய அறிவு ஏற்படுத்துதல்

**18. உலகமயமாக்கலின் ஏதேனும் மூன்று நன்மைகள்:** 1) **வெளிநாட்டு ஒத்துழைப்பை கூட்டுதல்** உலகமயமாக்கல் உரிம உடன்படிக்கை மூலமாக, இணைவினை செயல்பாடுகள் இணைப்பு பதிப்பு உரிமை பெற்ற பொருட்களை, மாற்றியமைத்தல் போன்ற முக்கிய திட்டங்கள் பல்வேறு முறைகளால் உலகலாவிய வர்த்தகத்தை அதிகரிக்க செய்கிறது. 2) **சந்தை விரிவாக்கம்** வார்த்தகத்தின் அளவு மற்றும் செயல்பாடு, உள்ளூரில் இருந்து தேசிய அளவிலும், தேசிய அளவிலிருந்து உலக அளவிலும் பெரிகிட, உலகமயமாக்கல் கோட்பாடு வழிவகுக்கிறது. 3) **தொழில்நுட்ப வளர்ச்சி** உலகமயமாக்கல் கோட்பாடு, ஒரு நிறுவனம் வெளிநாட்டு சந்தையில் நுழைய வழி வகை செய்கிறது. தொழில்நுட்பத்தை உலகமயமாக்கல் தத்துவத்தின் கீழ், பல நாடுகளுக்கு உரிமைத் தொகையினை பெற, தருவிப்பதன் மூலம் பெற உதவுகிறது.. 4) **மூளை வடிவகால் குறைப்பு** ஒரு நாட்டில் உள்ள படித்த மற்றும் திறமையான தொழிலாளர்களை இடம் பெற இத்தத்துவம் வழிவகை செய்கிறது. உலகமயமாக்கல், உள் நாட்டிலும் வேலைவாய்ப்பை உருவாக்கி, மனித சக்தியை திறமையாக அந்நாட்டிற்குள்ளே, பயன்படுத்த வழிவகை செய்கிறது.

**19. சரக்கு** பங்குகள், பங்குத் தொகுப்புகள், முதிர்ந்த பயிர், புல், நிலத்துடன் கூடிய அறுவடை செய்யத்தக்க தாவரங்களும், நற்பெயர், பதிப்புரிமை, வணிகக்குறிகள் , காப்புரிமை, வாயுப் பொருள்கள் , மின்சக்தி போன்றவை சரக்கு என்ற சொல்லில் அடங்கும். **நிகழ் சரக்கு / வருநிகழ்வுசார் சரக்கு** விற்பவர் தனக்கு பொருள் கிடைத்தல், விற்பனை செய்கின்றேன் என்று கூறி, பொருள் வாங்குநரிடம் ஒப்பந்தம் மேற்கொள்வது வருநிகழ்வுசார் சரக்கு எனப்படும். இது ஒருவகை எதிர்கால சரக்கு ஆகும், இது விற்பவர் கைவசம் வந்து சேர்வது, எதிர் காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியைப் பொறுத்தது.

**20. இரண்டு வகை கீறல்கள்:** 1) **பொதுக்கீறலிடல்** 1881 ம் ஆண்டு இந்திய மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 123 ன் படி, “இரு இணையான சாய்கோடுகளை மட்டுமோ அல்லது இரண்டு இணையான சாய்கோடுகளினிடையே, அண்டு கம்பெனி என்னும் சொற்களையோ அல்லது அவற்றின் சுருக்கத்தையோ கொண்டுள்ள மாற்றுத்தன்மை அற்றது என்ற சொல்லுடனோ அன்றித் தனித்தோ காசோலையில் சேர்த்தால், அச்சேர்க்கை கீறல் என்று கொள்ளப்படும். அக்காசோலை பொதுக் கீறலிடப்பட்டதாகக் கொள்ளப்படும்.2) **சிறப்பு கீறலிடல்** ஒரு வங்கியின் பெயரை செலாவணித் தன்மையற்றது என்று சொல்லுடனோ அல்லது தனித்தோ, ஒரு காசோலையின் குறுக்கே சேர்த்தால், அது சிறப்புக்கீறல் எனப்படும். அக்காசோலை அந்த வங்கியரின் பெயரில் சிறப்புக் கீறலிடப்பட்டதாகக் கொள்ளப்படும் என்று 1881ம் ஆண்டு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 124 வரைவிலக்கணம் வகுக்கிறது.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| 21. அடிப்படை | தொழில் முனைபவர் | அகத் தொழில் முனைபவர் |
|---|---|---|
| சிந்தனை | இவர் ஒரு தடையற்ற சிந்தனைவாதி | இவர் தன்னிச்சையான சிந்தனைவாதி |
| சார்பு நிலை | தன்னிச்சையான நபர் | தொழில் முனைவோரை சார்ந்து இருப்பவர் |
| நிதி திரட்டல் | தன் சொந்த முயற்சியில் தொழிலுக்கான நிதியை திரட்ட வேண்டும் | நிதி திரட்டும் பொறுப்பு இல்லை. ஆனால், திரட்டிய நிதியைகையாளும் பொறுப்பு உள்ளது |
| வெகுமதி | தங்களின் இடர் ஏற்பு பணிக்காக இலாபம் என்ற வெகுமதியை பெறுகின்றனர் | இலாபத்தில் பங்கு இல்லை. ஆனால், திரட்டிய நிதியை கையாளும் பொறுப்பு உள்ளது |
| இடர் ஏற்றல் | தான் ஆரம்பித்த தொழிலின் இடரை ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது | இவர், தொழில் தொடர்பாக எழும் இடர்பாட்டில் பங்கு பெறுவதில்லை |
| தகுநிலை | இவர் உரிமையாளர் என்ற தகுநிலை படைத்தவர் | இவர் உரிமையாளர் அல்ல. ஆனால், ஊழியர் தான் மேற்கொண்ட செயலுக்கு, தன்னுடைய மேல் அதிகாரிக்கு பதில் சொல்ல கடைமையுடையவர் |
| செயல்பாடு | தான் தொடங்கிய தொழிலின் புறத்தில் நின்று பெரும்பாலும் செயல்படும் நபர் | முழு நிறுமத்திற்கு உட்பட்டு இயங்கும் நபர் |

**22. வியாபாரத்தின் மூன்று சுற்றுச் சூழல் காரணிகளை விளக்கு.** 1) உட்புறச் சூழல் 2) நுண்ணிய சூழல் 3) பரந்த சூழல்

**1. உட்புறச் சூழல்** உட்புறச் சூழல் என்பது, நிறுவனத்தின் உட்புறத்தோடு தொடர்புடைய காரணிகளாகும். எனவே, இவற்றைக் கட்டுப்படுத்துதல், மாற்றி அமைத்தல் போன்றவற்றை நிறுவனங்கள் எளிதில் மேற்கொள்ள முடியும். **2. நுண்ணிய சூழல்** வியாபாரத்தின் செயல் திறனை உடனடியாக பாதிக்கும், சுற்று சூழலாக இருக்கும் காரணிகளை இது குறிக்கிறது. **3. பரந்த சூழல்** வணிகத்தின் வெற்றி, பரந்த சூழலுக்கு பொருந்தக் கூடிய தன்மையை சார்ந்து இருக்கிறது. ஏனென்றால், இவை கட்டுப்படுத்த முடியாத காரணிகள் ஆகும்.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 3X5=15**

**23.அ. நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?**

1) **அதிக விலைக்கு விற்றல்** விற்பனையாளர்கள் மற்றும் சேவைகளை அளிப்பவர்கள், தாங்கள் வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு அதன் தரத்திற்கு ஈடான விலையைக் காட்டிலும், கூடுதலான விலையை அளிப்பதற்கு பல்வேறு தருணங்களில் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

2) **கலப்படம்** உணவுப்பொருட்களில் விரும்பத்தகாத பதிலிப் பொருட்களைச் சேர்ப்பதாகும். கலப்படப் பொருட்களை வாங்கிப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு உடல்ரீதியாகவும், பணரீதியாகவும் கடுமையான இழப்புகள் ஏற்படுகிறது. உதாரணம் உணவு தானியங்களில் சிறிய கற்கள் சேர்க்கப்படுகின்றன. தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலக்கப்படுகின்றது. தேனின் அளவை அதிகரிப்பதற்காக தண்ணீர் மற்றும் சர்க்கரை சேர்க்கப்படுகின்றது. மஞ்சள்தூள் போன்ற மசலாக்களுடன் மெத்தனால் சேர்க்கப்படுகின்றது. கருப்பு மிளகுடன் பப்பாளி விதை கலக்கப்படுகின்றது. மிளகாய்ப் பொடியுடன் செங்கல் பொடி கலக்கப்படுகின்றது

3) **போலியான பொருட்கள்** மக்கள் மத்தியில் பிரபலமடைந்த வணிகக் குறியுடைய பொருட்களுக்கு, அதே போன்றபோலியான பொருட்கள் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்டு மோசடியாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. உதாரணம் தானியங்கி (ஆட்டோமொபைல்) வாகன உதிரிபாகங்கள், பிளேடுகள், கைக்கடிகாரங்கள், பேனாக்கள், வானொலிப்பெட்டிகள், மருந்துப் பொருட்கள், நகைகள், துணிகள் மற்றும் ரூபாய் நோட்டுக்கள் கூட கள்ளத்தனமாக போலியாகத் தயாரிக்கப்படுகின்றது.

4) **செயற்கைப் பற்றாக்குறை** சில சூழ்நிலைகளில் வணிகர்கள், தங்களின் வணிக நிறுவனங்களின் சரக்குகளை, இருப்பு வைக்கும் இடங்களில் போதுமான அல்லது தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட, தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர்ப்பலகையை வைக்கின்றனர். இத்தகைய செயல்முறையே செயற்கைப் பற்றாக்குறை எனப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் நுகர்வோர், தங்களின் தவிர்க்க இயலாத தேவையின் அடிப்படையில், அப்பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

5) **தரக்குறைவு** கட்டுமானம் செய்து முத்திரையிடப்பட்ட கொள்கலன்களை திறந்தால் அதில் அடைக்கப்பட்டுள்ள பொருட்கள் தரம் குறைந்ததாகவும், கெட்டுப்போனதாகவும், நிகர எடை கொள்கலனில் குறிப்பிடப்பட்டுள்ளதை விட, குறைவாக இருப்பதையும் காணமுடிகிறது. நுகர்வோர் தாம் வாங்கிய குறைபாடுடைய அல்லது சேதமடைந்த பொருட்களை கொடுத்து விட்டு புதிய பொருட்களை மாற்றிக் கொள்ள முயற்சிக்கும் போது நுகர்வோர் தமது கவனக்குறைவாலேயே அத்தகைய நிலை ஏற்பட்டதாக குற்றம் சாட்டப்படுகின்றனர்.

6) **இடர்பாடு கொண்ட**



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**பொருட்கள்** பொருட்களின் தயாரிப்பாளர்கள், தங்களின் தயாரிப்பு பொருட்களை நுகர்வோர் பயன்படுத்தும் போது, அவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் ஊறு விளைவிக்காமல் பொருட்களை முன்னெச்சரிக்கையுடன் எவ்வாறு பாதுகாப்புடன் பயன்படுத்த வேண்டும் என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நுகர்வோரிடம் முன் வைக்க வேண்டும். இத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இல்லாமல் நுகர்வோர் அத்தகைய அபாயகரமான பொருட்களை கையாளும் போது விபத்து ஏற்படுத்தும் வாய்ப்புகள் மிக அதிகம். **7) பொய் விளம்பரங்கள்** விளம்பரத்தின் முக்கிய நோக்கம், நுகர்வோர் மற்றும் பொருளை பயன்படுத்துபவர்களுக்கு பொருள் அல்லது சேவை குறித்த தகவல்களை அளிப்பதே ஆகும். ஆனால் நடைமுறையில் விளம்பரங்களில் பொருள் குறித்த தகவல்கள் மிகச்சிறிய அளவிலேயே வெளிப்படுத்தப்படுகின்றது. விளம்பரங்கள் பொருளின் தரம், விலை, உள்ளடக்கம், பயன்பாடு, உத்தரவாதம், செயல்திறன் குறித்த தவறான கருத்துக்களை பரப்பப்படுகின்றன. இவ்வகையான பொய் விளம்பரங்களை நம்பி பொருள்களை வாங்கும் நுகர்வோர் ஏமாற்றப்படுகிறார்கள்.

**23.ஆ பொதுமக்களிடம் நுகர்வோர் விழிப்புணர்வு எவ்வாறு உருவாக்குவாய்?** நுகர்வோர் தங்கள் உரிமையை அறிந்து கொள்ள அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல், நுகர்வோர் அமைப்புகளின் தலையாய நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்கு கீழ் குறிப்பிடபட்டுள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1) நுகர்வோர் குறித்த இதழ்கள், ஆராய்ச்சி நூல்கள், பிரசுரங்கள், கையேடுகள், துண்டுசீட்டுகள், ஆய்வு கட்டுரைகள் இவைகளை அச்சிட்டு வெளியீடுதல். 2) நுகர்வோர் விழிப்புணர்வு குறித்து, கருத்தரங்கங்கள், மாநாடுகள் மற்றும் பட்டறைகள் நடத்துதல். 3) நுகர்வோருக்கு, அவரின் உரிமை குறித்து அறிவை புகட்டுதல். 4) பெண்களுக்கு நுகரியம் (Consumerism) கல்வியை வழங்குதல்.

**24.அ. வணிகத்தின் பொருளாதார மற்றும் சமூக கலாச்சார சூழலை விளக்குக.**

**அ) பொருளாதாரச் சூழல்** ஒரு நாட்டில் வணிகம் என்பது பொருளாதார அமைப்பு முறையின் அடிப்படையில் ஒருங்கிணைந்த பகுதியாகும். வணிக சுழற்சிகள் தவிர்க்க முடியாதவை. பரந்த சுற்றுசூழலின் பல காரணிகளிடையே தொடர்புடையவை. அவை பின்வருமாறு.

**1) வளர்ச்சிக் கட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தின் இயல்பு** வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் மற்றும் வளர்ச்சியில் பின்தங்கிய நாடுகள் என நாட்டின் வளர்ச்சி மற்றும் தனிநபர் வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் உலகெங்கிலும் உள்ள நாடுகளை வகைப்படுத்தலாம். அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, கனடா மற்றும் ஆஸ்திரேலியா போன்றவை வளர்ச்சியடைந்த நாடுகள். வலுவான பொருளாதாரங்களைக் கொண்டுள்ளன. இந்தியா, சீனா, பிரேசில் மற்றும் மெக்ஸிகோ போன்றவை வளரும் நாடுகள். நடுத்தர வருவாய் பொருளாதாரங்களை கொண்டுள்ளன. பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகள் மிகவும் குறைந்த அளவிலான தொழில்நுட்ப தத்தெடுப்பு மற்றும் மிகக்குறைவான வாழ்க்கைத் தரத்தை கொண்டவையாக இருக்கின்றன. **2) பொருளாதார அமைப்பு முறையின் இயல்புகள்** பொருளாதார அமைப்புகளை முதலாளித்துவ, சமதர்ம அல்லது சோசலிச மற்றும் கலப்பு பொருளாதார அமைப்புகள் என்று மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம். முதலாளித்துவ பொருளாதார அமைப்பில்,ஒரு நாட்டின் உற்பத்திக்கான அனைத்து காரணிகளையும், தனிநபர்களும், தனியார் நிறுவனங்களும் சொந்தமாக்கி கொள்ளவும், நிர்வகிக்கவும் பயன்படுத்தவும் அரசு அனுமதி வழங்குகிறது. சமதர்ம அல்லது சோசலிச பொருளாதார அமைப்பில், தனியார் துறைமீது கட்டுப்பாடுகள் நிறைய உள்ளது. கலப்பு பொருளாதாரத்தில், அரசு மற்றும் தனியார்துறை ஆகிய இரண்டின் பங்களிப்பும் இணைந்ததாக இருக்கும். **3) ஒரு தேசத்தின் பொருளாதார கொள்கைகள்** நாணயக் கொள்கை, நிதிக்கொள்கை, ஏற்றுமதி இறக்குமதி கொள்கை, தொழில் துறைக் கொள்கை, வர்த்தக் கொள்கை, அந்நியச் செலாவணிக் கொள்கை ஆகியவை பொருளாதார சூழலின் பகுதியாக விளங்குகின்றன. **4) பொருளாதார குறியீடுகள்** மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த தேசிய உற்பத்தி, தேசிய வருமானம், தனிநபர் வருமானம், செலுத்துகை சமநிலை, சேமிப்பு விகிதம் மற்றும் முதலீடுகள் போன்றவை ஒரு தேசத்தின் பொருளாதார குறியீடுகள் ஆகும். **5) நிதிச் சந்தை அபிவிருத்தி** நிதிச் சந்தை அபிவிருத்தி என்பது, தொழில்துறை வளர்ச்சி, பணச்சந்தை, மூலதனச் சந்தை, பங்குச் சந்தை, பத்திரச் சந்தை மற்றும் சிறந்த வங்கியியல் அமைப்பு முறை போன்றவற்றின் சிறப்பான அபிவிருத்தி வெளிப்பாடாகும். **6) பொருளாதார கட்டமைப்பு** பொருளாதார கட்டமைப்பு என்பது, மூலதன உருவாக்கம், முதலீட்டு முறை, வர்த்தக சமநிலை, தொழிலாளர் உழைப்பின் அளிப்பு மற்றும் தேசிய உற்பத்தியின் கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது

**ஆ) சமூக கலாச்சாரச் சூழல்** வணிகம் சமூகத்தின் ஒரு அங்கமாகும். சமூக சூழலானது, வணிகம் அமைந்துள்ள சமூகத்தின் மொத்தக் காரணிகளைக் குறிக்கிறது. சமுதாயத்தின் சமூக மற்றும் கலாச்சார சூழல் வணிகத்திணை



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

பாதிக்கிறது. இது தனிநபர்களின் நடத்தை, குடும்பத்தின் பங்கு மற்றும் முக்கியத்துவம், பழக்க வழக்கங்கள், சமூக மதிப்புகள், மதம் மற்றும் மொழிகள், நெறிமுறை மதிப்புகள், கல்விஅறிவு நிலை மற்றும் மக்களின் சமூக மனப்பான்மை சமூக-கலாச்சாரச் சுற்று சூழல் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளன. மேலும் பல சமூக – கலாச்சார சூழலின் காரணிகள் பின்வருமாறு. சமூக நிறுவனங்கள் மற்றும் குழுக்கள் சமுதாயத்தில் பரவலான குடும்ப கட்டமைப்பு வணிகத்தில் திருமணத்தின் பங்கு சமூகத்தின் சாதி அமைப்பு முறை மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் சமூக மரியாதைகள். மக்கள் தொகையின் அளவு, அமைப்பு, கல்வியறிவு நிலை, விநியோகம் மற்றும் மக்கள் தொகை அடர்த்தி ஆகியவற்றை கொண்ட மக்கள் தொகைக் காரணிகள். மக்களின் வாழ்க்கை முறை மற்றும் அவர்களின் சுவை, விருப்பங்கள் மற்றும் முன்னுரிமைகள் போன்றவைகள் ஆகும்.

**24.ஆ. தொழில் முனைவோரை வகைப்படுத்துக.**

**1) தொழில் முனைவோர் இடர் ஏற்பாளர்**

**ரிச்சர்டு சேன்டில்யன்** என்ற ஈரானிய அறிஞர் தொழில் முனைவோர் என்பவர், தான் துவங்கிய அல்லது முனைந்த தொழிலில் இயற்கையாக பின்னி பிணைந்துள்ள இடரை தாங்கும் இடர் தாங்கி என வருணிக்கின்றார். மேலும், யாராலும் ஈடு செய்ய முடியாத அல்லது ஊதியம் வழங்க முடியாத இடரை தாங்கும் இடர்தாங்கி, தொழில் முனைவோர் என உரைக்கிறார். **2) தொழில் முனைவோன் ஒரு ஏற்பாட்டாளர் (அ) அமைப்பாளர் ஜின் பேப்டைஸ்** என்ற அறிஞரின் பார்வையில், தொழில் முனைபவர் ஒரு அமைப்பாளராக தென்படுகிறார். அவர் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வது எவ்வளவு கடினமோ, அவ்வளவு கடினமானது தொழில் முனைவது என்கிறார். தொழில் முனைவோர், நிலம், கட்டிடம், தொழில்நுட்பம், மூலதனம் பணியாளர்கள் மற்றும் பல்வேறு வசதிகளை ஒன்றிணைத்து, தொழிலை அவர் எதிர்கொள்ளும் தடைகள் எதிர்பாராத போக்குகள் மனத்துயரம் போன்றவற்றை சொல்லிமாளாது என்கிறார். எனவே, தொழில் முனைபவர் ஓர் நல்ல அமைப்பாளர் என வரையறுக்கிறார். **3) தொழில் முனைபவர் ஒரு புதுமைபித்தன்** 1934 ஆம் ஆண்டில் வாழ்ந்த ஹீம் பீட்டர் தொழில் முனைபவரை புதின படைப்பாளி என அழைத்தார். அவரின் கருத்துப்படி, தொழில்முனைபவர் ஒரு படைப்பாளியாக சீரான முறையில் ஏதேனும் ஒரு புதுமையை புகுத்த வேண்டியது அவசியமாகிறது என்கிறார்.

• பொருளில் புதிய தொழில் நுட்பத்தை புகுத்துவது • புதிய இடங்களில் கச்சா பொருள்களை வாங்குவது • இதுவரை இடம் பெறாத சந்தையில் நுழைவது • முற்றுரிமையை ஏற்படுத்த அல்லது ஏற்படுத்தப்பட்ட முற்றுரிமையை தகர்க்க புதிய அமைப்பு முறையை கொணர்வது.

• புதிய சிறப்புத்தன்மையை பொருளில் புதியதாக சேர்ப்பது இவரின் கண்ணோட்டத்தில் புதுமைபடைப்பவனே தொழில் முனைபவன் என்கிறார்.

| 25.அ. அடிப்படை | நிபந்தனைகள் | நம்புறுதிகள் |
|---|---|---|
| பொருள் | ஒப்பந்தத்தின் கருப்பொருளாகத் திகழ்வது | ஒப்பந்தத்திற்கு துணையாக இருக்கிறது |
| முக்கியத்துவம் | ஒப்பந்தத்தில் நிபந்தனையை மீறுவது, ஒப்பந்தத்தை மீறுவதாக கொள்ளப்படுகிறது | நம்புறுதியை மீறுவது, ஒப்பந்தத்தினை மீறுவதற்கு ஒப்பாகாது |
| உரிமை மாற்றம் | நிபந்தனை நிறைவேற்றாமல், உரிமை மாற்றம் நிகழ முடியாது | நம்புறுதியை நிறைவேற்றாமல், உரிமை மாற்றம் நிகழ முடியும் |
| பரிகாரம் / தீர்வு | நிபந்தனை மீறுவதனால், ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்ட நபர், ஒப்பந்தத்தை நீக்கிகொள்வதுடன், நட்ட ஈடு கோரும் உரிமயைப் பெறுகிறார் | நம்புறுதியை மீறுவதனால், ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்ட நபர், நட்ட ஈடு கோரும் உரிமையை மட்டும் பெறுகிறார் |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| **25.ஆ. அடிப்படை** | **மாற்றுச் சீட்டு** | **காசோலை** |
|---|---|---|
| வரையப்படுவது | ஒரு குறிபிட்ட நபர் மீது வரையப்படுவது | ஒரு குறிபிட்ட வங்கி மீது வரையப்படுவது |
| செலுத்தப்படுவது | கேட்டவுடனோ அல்லது குறிப்பிட்ட கால முதிர்வின் போதோ தருமாறு எழுதப்படுவது | எப்போதும் கேட்டவுடனே பணம் கொடுக்குமாறு எழுதப்படுவது |
| ஏற்பு | எழுதப்பெற்றவர் ஏற்க வேண்டும் | இதனை ஏற்பு செய்திட தேவையில்லை |
| சலுகை நாள் | முதிர்வு காலம் முடிந்த நாளிற்கு பின் பணம் தர மூன்று சலுகை நாட்கள் வழங்கப்படுகின்றது | காசோலைக்கு பணம் தர, வங்கிக்கு சலுகை நாட்கள் தரப்படுவதில்லை |
| மறுப்பு அறிவிப்பு | மாற்றுச்சீட்டு மறுக்கப்படும் போது, வரைந்தவர் முன்தரப்பினர்களுக்கு மறுப்பு அறிவிப்பு தரவேண்டும் | காசோலைக்கு பணம் மறுக்கப்படும் போது, வரைந்தவர் முன்தரப்பினர்களுக்கு மறுப்பு அறிவிப்பு தரவேண்டியது இல்லை |
| படிகள் | அந்நிய மாற்றுச் சீட்டு மூன்று படிகள் தயாரிக்கப்படுகிறது | காசோலைக்கு பணம் பெற படிகள் எடுக்க வேண்டிய அவசியமில்லை |
| வட்டம் | இதனை வட்டம் செய்து, அதன் முதிர்வு நாளுக்கு முன் பணம் பெற முடியும் | காசோலையை வட்டம் செய்து, வங்கி பணம் தருவதில்லை. ஆனால், வசூலுக்கு செலுத்தப்படும் காசோலைகளை வட்டம் செய்து பணம் பெற முடியும் |
| வருவாய்தலை | இதில் வருவாய்தலை அதன் மதிப்பிற்கு ஏற்ப ஒட்ட வேண்டும் | இதில் வருவாய்தலை ஒட்ட வேண்டியதில்லை |
| செலாவணி | இதனை எந்நாட்டு செலாவணியிலும் எழுதலாம் | இதனை உள்நாட்டு செலாவணியில் மட்டுமே எழுதமுடியும் |
| கீறல் | இதனை கீறலிட முடியாது | இதனை கீறலிட முடியும் |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593